

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க கழகத்தின் ஒன்றிய, நகர, பகுதி கழக, வட்டக்கழக, பேரூர் கழக அமைப் புகள் மறுசீரமைப்பு தொடர்பான மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. செயல்வீரர்கள் கூட் டம் திருமங்கலம் கொடி திருமண மண்டபத் தில் நடைபெற்றதில் தெற்கு மாவட்ட செயலா ளர் சேடபட்டி மு.மணிமாறன் எம்.எல்.ஏ. தலைமைக் கழக பிரதிநிதிகள் பி.டி.சி. செல்வ ராஜ், மூத்த வழக்கறிஞர் ரவீந்திரன் ஆகி யோர் முன்னிலையில் தலைமை வகித்து சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில் மாவட் டத் துணைச் செயலாளர் ஏர்போர்ட் பாண்டி யன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் லதா அதியமான், முத்துராமலிங்கம், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் கே.ஐ.மகிழன், செல்லம்பட்டி முத்துராமன், ஜெயராஜ், பொருளாளர் நிரஞ்சன், நகர செய லாளர் ஸ்ரீதர், ஒன்றிய செயலாளர்கள் மதன் குமார், தனபாண்டி, ராமமூர்த்தி, மகளிர் அணி அமைப்பாளர் கிருத்திகா தங்கபாண்டியன், நகராட்சி சேர்மன் ரம்யா முத்துக்குமார், ஆத வன், சிவமுருகன், செல்வம், கிருஷ்ண பாண்டி, ஈஸ்வரன், உசிலை சிவா உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள் கழகத்தினர் பங் கேற்றனர்

தலைமை கழக பிரதிநிதிகள் புதுவை சிவா,ஜெ. வீரமணி பங்கேற்பு!

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

மாவட்டக் கழகச் செயலாளர் செஞ்சி மஸ்தான் சிறப்புரை!

செஞ்சி, அக்.14-

செஞ்சியில் நடைபெற்ற விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக அவசர செயற்குழுக் கூட்டத்தில் நிர்வாக வசதிக்காகநான்கு ஒன்றியங்களாக பதிவு செய் யப்பட்டு ஏற்கனவே எடுத்த தீர்மானத்தின் அடிப்படை யில்விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள ஒன் றியங்களை நான்கு ஒன்றி யங்களாக பிரிக்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றினார்

கூட்டத்தில் தலைமைக் கழக பிரதிநிதிகள் புதுவை மாநில திமுக அமைப்பாளர் புதுவை சிவா, மாநில மாண வரணி செயலாளர் ஜெ .வீர மணி,விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர், முன் னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் ஆகியோர் சிறப்பு ரையாற்றினர்.

விழுப்புரம் வடக்கு மாவட்ட செஞ்சி, மயி லம், திண்டிவனம் சட்ட மன்ற தொகுதிகளுக்கான திமுக அவசர செயற்குழு கூட்டம் செஞ்சி திருவண் ணாமலை சாலையில் உள்ள தமிழ் திருமகள் திருமண மண்டபத்தில் நடை பெற்றது.

கூட்டத்திற்கு விழுப் புரம் வடக்கு மாவட்ட அவை தலைவர் டாக்டர் சேகர் தலைமை தாங்கி னார்.முன்னாள் மத்திய அமைச்சர் செஞ்சி ராமச்சந் திரன், மாவட்ட துணை செயலாளர்கள்ரவிக்குமார், அருணகிரி, அமுதா ரவிக்கு மார்,ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

செஞ்சி கிழக்கு ஒன்றிய செயலாளர்,ஒன்றிய பெருந் தலைவர் விஜயகுமார் அனைவரையும் வரவேற் றார்.

கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலா ளர் ,முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டுஆகஸ்ட் 22 அன்று சென்னை அண்ணா அறிவா லயத்தில் கழகத் தலைவர் மு.க .ஸ்டாலின் அவர்க ளின் தலைமையில் நடை பெற்ற கழக செயற்குழு கூட்டத்தில்கழக மறுசீர மைப்பு பணிகள் குறித்து நிறைவேற்றப்பட்ட தீர்மா னங்கள் மற்றும்கழக ஆக்கப் பணிகள் குறித்துசிறப்புரை ஆற்றினார்.

தலைமைக் கழக பிரதி நிதிகள் புதுவை மாநில திமுக அமைப்பாளர் புதுவை சிவா, மாநில மாண வரணி செயலாளர் ஜெ. வீர மணி ஆகியோர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பல்வேறு ஆலோ சனைகளை வழங்கி சிறப்பு ரையாற்றினர்.

கூட்டத்தில் தலைமை கழகம் அறிவித்த கட்சி நிர் வாக சீரமைப்பு தீர்மானங் களை செயல்படுத்தும்வகை யில் விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி சட்ட மன்றத் தொகுதியில்நிர் வாக வசதிக்காகசெஞ்சி ஒன்றியத்தில் 4 ஒன்றியங்க ளாக பதிவு செய்யப்பட்டு ஏற்கனவே எடுத்த தீர்மா னத்தின் அடிப்படையில் செஞ்சி கிழக்கு,

செஞ்சி மேற்கு, செஞ்சி மதியம், செஞ்சி தெற்கு என 4 ஒன்றியங்களாக பிரிக்கப் பட்டும், மேல்மலையனூர் ஒன்றியத்தில் மேல்மலைய னூர் கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என 4 ஒன் றியங்கள் ஆகவும்,மயிலம் சட்டமன்றத் தொகுதியில் நிர்வாக வசதிக்காக பூலோக ரீதியாக வடக்கு, தெற்கு ,மத்திய, திசைகள் மாற்றி அமைக்கப்பட்டு மயிலம் வடக்கு ஒன்றியம் தொடர்ந்து மயிலம் வடக்கு ஒன்றியமாக செயல்படும் .மயிலம் தெற்கு ஒன்றியம் மயிலம் மத்திய ஒன்றியமா கவும்,மயிலம் மத்திய ஒன்றி யம் மயிலம் தெற்கு ஒன்றி யமாகவும் செயல்படும் .மேலும் மயிலம்தெற்கு ஒன் றியத்தில் செயல்பட்டு வந்த மயிலம் மற்றும் தென் கொளப்பாக்கம் ஊராட் சியை மத்திய ஒன்றியத்தில் இணைத்துதீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

திண்டிவனம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்டமரக் காணம் ஒன்றியம் மரக்கா ணம் கிழக்கு, மரக்காணம் மேற்கு, மரக்காணம் வடக்கு, மரக்காணம் தெற்கு என நான்கு ஒன்றி யங்களாகவும், ஒலக்கூர்கி ழக்கு ஒன்றியத்தை நிர்வாக வசதிக்காக இரண்டு ஒன்றி யங்களாக பிரித்துதீர்மானம் நிறைவேற்றப்பட்டது

செஞ்சி பேரூராட்சி 18 வார்டுகளாக செயல்பட்டு வருகிறது தற்போது நிர்வாக வசதிக்காக 18 வார்டுகளு டன் கூடுதலாக 9 பகுதி கழ கங்களையும், அனந்தபுரம் பேரூராட்சியில் 15 வார்டு கள் செயல்பட்டு வருகிறது தற்போது நிர்வாக வசதிக் காக 15 வார்டுகளுடன் கூடு தலாக 3 பகுதிகழகங்களை யும், மரக்காணம் பேரூராட்சியில் 18 வார்டு கள் செயல்பட்டு வருகிறது தற்போது நிர்வாக வசதிக் காக 18 வார்டுகளுடன் கூடு தலாக 5 பகுதி கழகங்களை யும்,திண்டிவனம் நகராட்சி யில் 33 வார்டுகளாக செயல் பட்டு வருகிறது தற்போது நிர்வாக வசதிக்காக 33 வார் டுகளை இரண்டாக பிரித்து திண்டிவனம் வடக்கு, திண் டிவனம் மேற்கு எனவும்பி ரித்து உள்ளிட்ட தீர்மானங் கள் நிறை வேற்றப்பட்டன.

கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் சேது நாதன், செந்தமிழ் செல்வன், மாவட்ட இளை ஞரணி அமைப்பாளர் ஆனந்த், செயற்குழு உறுப் பினர் நெடுஞ்செழியன், பொதுக்குழு உறுப்பினர் கள் மணிவண்ணன், வீடூர் ரவி,சாந்தி ஏழுமலை,பாலகி ருஷ்ணன்,ஒன்றிய செயலா ளர்கள்பச்சையப்பன், சாந்தி சுப்பிரமணியன், நாராயணமூர்த்தி, அண் ணாதுரை, மொடையூர் துரை, இளம்வழுதி ,ராஜா ராமன், மணிமாறன், செழி யன், சொக்கலிங்கம், தயா ளன், பழனி ரவிச் சந்திரன், அனந்தபுரம் நகர செய லாளர் சம்பத், செஞ்சி பேரூ ராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ் தான்,அனந்தபுரம் பேரூ ராட்சி மன்ற தலைவர் முரு கன், ஒன்றிய துணைச் சேர்மன்ஜெயபாலன் உள் ளிட்ட மாநில மாவட்ட ஒன்றிய ஊராட்சி கழக நிர் வாகிகள் அனைத்து அணி அமைப்பாளர்கள், தொமுச நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர் செஞ்சி நகர செயலாளர் கார்த்திக் நன்றி கூறினார்.

திருப்பத்தூர் மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் க.தேவராஜி அறிக்கை!



திருப்பத்தூர், அக்.14-

திருப்பத்தூர் மாவட்டக் கழகச் செயலாளர் க.தேவ ராஜி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

திருப்பத்தூர் மாவட்ட திமுக செயற்குழு கூட்டம் நாளை (15.10.2026) காலை 11.00 மணியளவில் வாணியம்பாடியிலுள்ள மாவட்டக் கழக அலுவகத் தில் திருப்பத்தூர் மாவட்ட அவைத்தலைவர் ஆர்.எஸ். ஆனந்தன் தலைமையில் நடைபெறுகிறது.

திருப்பத்தூர் மாவட்ட செயலாளர் க.தேவராஜி கலந்துகொண்டு ஒன்றிய, நகர, பேரூர், வார்டு, கிளைக் கழகம் மறு சீர மைப்பு பணிகள் குறித்து பல்வேறு ஆலோசனை களை வழங்க உள்ளார்.

அதுசமயம் இன்னாள் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர் கள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

விழுப்புரம் தெற்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி அறிக்கை!



விழுப்புரம், அக்.14-

கடந்த ஆகஸ்ட் 22 அன்று நடைபெற்ற கழக தலைமை செயற்குழு கூட் டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் அடிப் படையில், விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க. விற்கு உட்பட்ட நகர ஒன் றிய பேரூர் கழகங்களில் மேற்கொள்ளப்பட உள்ள மறுசீரமைப்புகள் குறித்த விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க. செயற் குழு ஆலோசனைக் கூட் டம், மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி தலைமையில் இன்று (14.10.2026 (புதன்கிழமை) காலை 10 மணிக்கு விழுப்புரம் கலைஞர் அறிவாலயத்தில் உள்ள தளபதி அரங்கில் நடைபெற உள்ளது. மறுசீர மைப்புக்கான தலைமைக் கழக பிரதி நிதிகள் புதுச் சேரி மாநில அமைப்பாளர் இரா.சிவா மற்றும் மாநில மாணவர் அணி செயலாளர் தி.ரு.ம.தி. ஜெ. வீரமணி ஆகியோரது முன்னிலையில் நடைபெற உள்ள இக்கூட் டத்தில் கழக துணைப் பொதுச்செயலாளர் முனை வர் க.பொன்முடி கலந்து கொண்டு சிறப்புரையாற்று கிறார்.

மாவட்ட கழக அவைத் தலைவர் ம.ஜெயச்சந்திரன் , மாநில விவசாய தொழிலா ளர் அணி செயலாளர் அன் னியூர் சிவா , மாநில மகளிர் அணி பிரச்சாரக் குழு செய லாளர் மோ.தேன்மொழி, மாவட்ட கழக துணைச் செயலாளர்கள் டி.என்.முரு கன், இரா.கற்பகம், உள் ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொள்ளும்

இக்கூட்டத்தில் தலைமை செயற்குழு உறுப் பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய நகர பேரூர் கழக செயலா ளர்கள், நிர்வாகிகள், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் , சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் ஆகி யோர் கலந்துகொள்ள கேட்டுக் கொள்கிறேன் என்று விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் பொன்.கௌதமசிகாமணி தெரிவித்துள்ளார்.



தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதி, புதூர் ஊராட்சி ஒன்றியம்,கந்தசாமிபுரம் ஊராட்சி, ஜெகவீரபுரம் கிராமத்தில் சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.7லட்சம் பயணியர் நிழற்குடை கட்டிடத்தினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர்,ஜீ. வி மார்கண்டேயன் திறந்து வைத்தார்.நிகழ்வில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சசிகுமார்,தனலட்சுமி ஒன்றிய செயலாளர்கள் செல்வராஜ், இம்மானுவேல், மாவட்ட கலை இலக்கிய அணி துணை அமைப்பாளர் பாலமுருகன் கிளை அவைத்தலைவர் கருணாநிதி கிளைச் செயலாளர் சேகர் கழக நிர்வாகி துரைராஜ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

விழுப்புரம் மத்திய மாவட்ட தி.மு.க.

விழுப்புரம் - வானூர் சட்டமன்றத் தொகுதிகளுக்கான செயற்குழுக் கூட்டம்!

மாவட்ட பொறுப்பாளர் டாக்டர்.இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ. அறிக்கை



விழுப்புரம், அக்.14-

விழுப்புரம் மத்திய மாவட்டப் பொறுப்பாளர் இரா. இலட்சுமணன் எம். எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

விழுப்புரம் மத்திய மாவட்ட திமுக சார்பில் விழுப்புரம் மற்றும் வானூர் சட்டமன்ற தொகுதிகளுக் கான செயற்குழு கூட்டம் இன்று 14.10.2026-புதன் கிழமை) பிற்பகல் 3.30 மணிக்கு விழுப்புரம், கலைஞர் அறிவாலயத்தில் எனது (இரா.லட்சுமணன் எம்.எல்.ஏ.) தலைமையில் நடைபெற உள்ளது.இக் கூட்டத்தில் தலைமை கழக பிரதிநிதிகள் புதுவை மாநில திமுக அமைப்பாளர் புதுவை. இரா.சிவா மற்றும் மாநில மாணவர் அணி செயலாளர் திரு.மதி. ஜெ.வீரமணி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பு ரையாற்ற உள்ளார்கள்.

இக்கூட்டத்தில் கழக சீரமைப்பு குறித்து விவாதிக் கப்பட உள்ளது. அது சம யம் மாநில / மாவட்ட நிர் வாகிகள்,

நகர, ஒன்றிய மற்றும் பேரூர் கழக செயலாளர் கள் / தலைவர்கள், தலைமை செயற்குழு மற் றும் பொதுக்குழு உறுப்பி னர்கள், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர் கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

தேனி வடக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் தங்கதமிழ்ச்செல்வன் எம்.பி. அறிக்கை!



தேனி, அக்.14-

தேனி வடக்கு மாவட்ட கழகச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன்.எம்.பி. விடுத்துள்ள அறிக்கை வரு மாறு:

தேனி வடக்கு மாவட் டக்கழகச் செயற்குழுக் கூட் டம் தேனி ABM ஹோட் டலில் நாளை (15.10.2026 - வியாழக்கிழமை) மாலை 5 மணி அளவில் மாவட்டக் கழக அவைத் தலைவர் பி.டி செல்லப்பாண்டியன் தலைமையில், கழக மறுசீர மைப்பின் தலைமைகழக பிரதிநிதிகள்: சுபா சந்திர சேகர் கழக சட்டதிட்ட திருத்தக்குழு இணைச்செய லாளர், கவிஞர் காசி முத்து மாணிக்கம். மாநில வர்த்த கர் அணி செயலாளர் ஆகி யோரது முன்னிலையில் நடைபெற உள்ளது.

அதுசமயம், செயற்குழு கூட்டத்தில் தலைமைக் கழக நிர்வாகிகள், முன் னாள்இன்னாள் நாடாளு மன்ற உறுபினர்கள் மற்றும் சட்டமன்ற உறுபினர்கள் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு,

பொதுக்குழு உறுப்பினர் கள், ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள்,உள் ளாட்சி மன்ற தலைவர்கள் கழக சார்பு அணிகளின் மாவட்ட அமைபாளர்கள் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்கும் படி கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்:1. அண்ணா அறிவாலயத்தில் கழக தலை வர் தலைமையில் நடை பெற்ற தலைமைச் செயற் குழுக் கூட்டத்தில் கழக நிர் வாக சீரமைப்பு தீர்மானத்தின் படி, ஒன்றி யம்,நகரம், பேரூர் கழகம் மறுசீரமைப்பு குறித்து

2. கழக ஆக்கப் பணிகள்

இவ்வாறு அவர் வேண்டு கோள் விடுத்துள்ளார்.

சந்தி சிரிக்கும் சட்டம் – ஒழுங்கு!

செயலற்ற விஜய் ஆட்சியில் கொலை, கொள்ளைகள்!

(12.10.2026)



1. தர்மபுரி மாவட்டம், கடத்தூர் அருகே திருமணமான பெண்ணை அடித்துக் கொன்று குப்பைமேட்டில் புதைத்த கூலி தொழிலாளி .

2. நாகப்பட்டினம் மாவட்டம், வேளாங் கண்ணி அருகே விழுந்தமாவடியில் உள்ள தனியார் விடுதியில் தங்கி இருந்த பயணிகளுக்கும் விடுதி ஊழியருக்கும் மோதல் , விடுதி ஊழியர் அடித்துக் கொலை .

3. நீலகிரி மாவட்டம், கூடலூர் அடுத்த அள்ளூர் வயலில் பெண் சுவற்றில் தலையை மோதி அடித்துக் கொலை..

4. தென்காசி மாவட்டம், சுரண்டை அருகே தட்டாங்குளத்தில் கூலித் தொழி லாளி உருட்டு கட்டையால் அடித்துக் கொலை.

5. கடலூர் மாவட்டம், விருத்தாச்சலம் அருகே பெண்ணாடத்தில் போதை ஊசி செலுத்தி வாலிபர் கொலை ..?, நண்பர் கள் இரண்டு பேர் சிக்கினர்.



6. விழுப்புரம் மாவட்டம், செஞ்சி அருகே வீட்டில் தூங்கிக் கொண்டிருந்த ஏழு வயது சிறுமி மாயம்,பரபரப்பு.

7. தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் அரசு போக்குவரத்துக் கழகத்தில் முன் விரோதம் காரணமாக பணியிட மாற் றம் செய்துள்ளதாகக் கூறி கிளை மேலாளரை கத்தியால் குத்திய ஓட்டுநர்.

8. சேலம் மத்திய சிறைச்சாலையில் கைதிகளுக்கு இடையில் மோதல், சக கைதி மீது திராவகம் வீச்சு.



9. சேலம் நகரத்தில் வெள்ளிப் பட்ட றையில் நள்ளிரவில் காவலாளியை தாக்கி ரூ.15 கோடி மதிப்புள்ள 600 கிலோ வெள்ளிப் பொருட்களை கொள்ளையடித் துச் சென்ற கும்பல்.

10. நாமக்கல் அருகே ஆபாச செயலி மூலம் வாலிபரை ஏமாற்றி வரவ ழைத்து ரூபாய் 10 ஆயிரம் வழிப்பறி.

11. குமரி மாவட்டம், தோவாளை அருகே நடைபெற்ற படப்பிடிப்பில் ஏற்பட்ட தகராறில் உதவி இயக்குனருக்கு சரமாரியாக அரிவாள் வெட்டு .

12. சென்னை, கீழ்ப்பாக்கத்தில் சீட்டு பணத்தை கொடுக்காத ஆத்திரத்தில் பெண்ணுக்கு சரமாரியாக உருட்டு கட்டையடி .

13. நிர்வாகத் திறன் இல்லாத விஜய் ஆட்சியில் தமிழ்நாடு முழுவதும் மின் வெட்டு, தலைமைச் செயலகமும் இருளில் மூழ்கியது .

14. சென்னை, வண்ணாரப்பேட்டை காவல் நிலையத்தில் பெண் போலீஸ் ஏட்டு, மற்றும் இரண்டு சப்இன்ஸ்பெக்டர்கள் மீது மாமூல் வேட்டை புகார்.

15. தஞ்சையில் ரூ.5 கோடி லஞ்சம் வாங்கியதாக எழுந்த புகாரில் கைதான போலீஸ் இன்ஸ்பெக்டர் சஸ்பெண்ட் .

16. கோவை மாநகரத்தில் 500 ரூபாய் கள்ள நோட்டு புழக்கம், மதுபானக் கடையில் மாற்ற முயன்றபோது சிக்கிய கும்பல்.